1980 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தைகளை திரும்பப் பெற வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : வாபஸ் வாங்குகிறேன். நம் முடைய முதல்வரைப் பற்றி ஏன் இப்படிப் பேசுகிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(இ) உறுப்பினரது திருத்தங்கள் தள்ளப்பெற்றுள்ளது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்களுடைய செயலகத்திலிருந்து தாங்கள் பிறப்பித்திருந்த ஒரு ஆணை இப்போது என் கைக்குக் கிடைத்திருக்கிறது. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் சில திருத்தங்களைக் கொடுத்திருந்தேன். அந்தத் திருத்தங்களில் சிலவற்றை தாங்கள் தள்ளியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் நீண்டநாட்களாக உறுப்பினராக இருக்கிறீர்கள். நான் டிஸ் அலவ் செய்ததை இங்கே எழுப்பக்கூடாது. அதைப்பற்றி பேசக்கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் உத்தரவிட்டது இப்போது தான் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. என்னுடைய திருத்தம், * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அந்த வாசகத்தை எடுத்துவிட வேண்டும். அதைச் சொல்லக் கூடாது. அது தங்களுக்குத் தெரியாதது அல்ல.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் சீதாபதி கல்லூரியிலும், திருச்சியில் செயின்ட் ஜோசப் கல்லூரியிலும்....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இப்படி எழுந்து, இந்தப் பிரச்னையைப் பற்றி பேசக்கூடாது. இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. உட்காருங்கள். தாங்கள் கொடுத்தவைகள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றபோது, அதைப்பற்றி இங்கே பேசக் கூடாது ; எழுப்பவும் கூடாது. உட்காருங்கள். திரு. உமாநாத் அவர்கள்.

[முற்பகல் 10·20]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்லுகிறபோது தாங்கள் ஒரு ரூலிங் கொடுத்தீர்கள். சேம்பரில் ரிஜக்ட் பண்ணியதைப் பற்றி இங்கே கேட்கக் கூடாது என்று சொன்னீர்கள். அப்படியானால் சேம்பருக்கு வந்து மறுபடியும் கேட்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையில் அனுமதி மறுக்கப் பட்டதை இந்த அவையில் விவாதப் பொருளாக ஆக்கக்கூடாது. வேண்டுமானால் மறுபடியும் அறையில் வந்து கேட்கலாம்.

(ஈ) அமைச்சர் திரு. செ. சௌந்தரபாண்டியனின் பதவி விலகல் செய்தி குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ராஜினாமா செய்திருப்பதாகவும், அதைக் கவர்னர் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அமைச்சர் வரிசையில் அவருடைய பெயர் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு இதுவரை தகவல் கிடைக்க வில்லையா அல்லது பத்திரிகையில் வந்த செய்தி தவறானதா ? அவருடைய ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி பேரவையில் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற பேரவாவோடு கேட்டிருக் கிறீர்கள். பேரவைத் தலைவருக்கு அதைப் பற்றிய விவரம் எந்த வடிவிலும் வரவில்லை. நீங்கள் பத்திரிகையில் பார்த்திருக்க லாம். வேறுவிதமாக செய்திகள் வந்திருக்கலாம். பேரவைத் தலைவர் என்ற முறையில் அவரிடமிருந்து எந்தவித அறிக்கையோ அல்லது கடிதமோ எனக்கு வரவில்லை. அவர் இருக்கிறபோது இந்தப் பிரச்னையை எழுப்பினால் தகுந்த பதில் கிடைக்கும்.